தமிழக சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1967 மார்ச் 28.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள், விடைகள்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் : இன்றைய அலுவல்களின் தொடக்கத்திலே "வினாக்கள், விடைகள்". நல்ல வேளையாக இன்றைக்கு ஒரு குறுகிய காலக் கேள்வியும், ஒரு சாதாரணக் கேள்வியும் இருக்கின்றன. முதலிலே குறுகிய காலக் கேள்வி.

Fishermen off the coast

* *S.N. Q.*—No. 1 Thiru M. C.Balan : Will the Hon. the Minister for Agriculture, be pleased to state :

(a) Whether any complaint was received that a catamaran with four fishermen went off the coast at Colachal and did not return back; and

(b) if so, the action the Government have taken in the matter and for alleviating the grievances of the fishermen in that area?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) மீன்துறை நெறியாளர், சென்னை வாணிகக் கப்பல் துறை முதல்வர் அவர்களை குளச்சல் கடற்கரை வழிச் செல்லும் எல்லாக் கப்பல்களையும் காணாமற்போன மீனவர்களைக் கண்டு பிடிப்பதற்கு விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக் கொண்டார். பின்னர் நான்கு மீனவர்களும் கடற்கரைக்குச் சௌகரியமாக வந்து சேர்ந்தனர்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : சட்ட மன்றத் தலைவரவர்களே, மீனவர்கள் பொதுவாக ஆபத்தான தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்பாக இருக்கின்ற முறையிலே இன்ஷ்யூரன்ஸ் திட்டம் ஒன்றை வகுக்க இந்த சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி : அவையின் முன்னால் இப்பொழுதுள்ள கேள்வி மூலக் கேள்விக்குச் சம்பந்தப்பட்ட கேள்வியில்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவரவர்களே, மீனவர்கள் குளச்சல் கடற்கரையிலிருந்து கட்டுமரத்தில் ஏறிச்சென்றார்கள் என்றுதான் குறிப்பிட்டு இருக்கிறது. கட்டுமரத்தில் அவர்கள் எதற்காகச்

சென்றார்கள்? எந்தத் தேதியில் சென்றார்கள்? அவர்களுக்கு ஏதாவது சேதம் ஏற்பட்டிருக்கிறதா? அப்படியானால் அதனுடைய விவரம் என்ன?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி: மார்ச் மாதம் 15-ஆம் தேதி மீன்பிடிப்பதற்காக நான்கு மீனவர்கள் கட்டுமரத்தில் ஏறிச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் பாதுகாப்பாக கடற்கரைக்கு வந்து சேர்ந்திருக்கிறார்கள், எந்தவிதமான சேதமும் ஏற்படவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: சபாநாயகர் அவர்களே, இம்மாதிரி மீனவர்கள் அடிக்கடி ஆபத்திலே சிக்கிக்கொள்ளாமல் இருப்பதற்கு இனிமேலாவது நடவடிக்கைகளை சர்க்கார் எடுத்துக் கொள்ளுமா?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி: கடலிலே செல்கின்ற நேரத்திலே எந்த நேரத்திலும் ஆபத்து வரலாம். அதற்காக அரசாங்கம் தனித் திட்டம் மேற்கொள்ள இயலாது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம்: சார், அடிக்கடி மீனவர்களுக்கு இது போன்ற கஷ்டங்கள் ஏற்படுகின்றனதனாலே அவர்களுடைய குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றன. ஆகவே, ஒரு கணிசமான அளவுக்கு, அவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டால், அவர்கள் குடும்பங்கள் பிழைக்கக்கூடிய வகையிலே அரசாங்கம் ஏதாவது உதவி செய்ய உத்தேசம் உண்டா?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி: பாதிக்கப்பட்ட மீனவர்கள் குடும்பங்களைப் பற்றி அரசாங்கம் அவ்வப்பொழுது கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது.

திரு. கே. விநாயகம்: இந்தக் குறிப்பிட்ட சம்பவம் நேர்ந்த நாளன்று மீட்டிரியலாஜிக்கல் டிபார்ட்மெண்டார் இதுபோன்று ஆபத்து ஏற்படக்கூடும் என்று எச்சரிக்கை செய்து அறிக்கை அல்லது விளம்பரம் செய்தார்களா?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி: அப்படியொன்றும் ஆபத்து இல்லாத காரணத்தாலே விளம்பரம் செய்யப்படவில்லை.

திரு. கே. பி. எஸ். மணி: சார், இந்த மீனவர்களுக்கு இம்மாதிரி ஆபத்துக்கள் புயல் காற்றினாலே ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. பன்னெடுங்காலமாக இருந்துவருகிற ஆபத்துக்களைத் தீர்க்க முன்னாலே இருந்த சர்க்கார் ஏதாவது செய்திருக்கிறதா?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி: ஏற்கனவே இருந்த சர்க்கார் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதற்குத் தகவல் இல்லை. இப்பொழுது கேள்வி சம்பந்தப்பட்ட வரையிலே புயல் வறபட்ட நல்லமை இல்லை. தற்செயலாகச் சென்றவர்கள்தான் காணாமற் போனார்கள்.

1967 மார்ச் 28]

திரு. எஸ். ஆறுமுகம் : இதுபோன்று அடிக்கடி மீனவர்களுக்கு ஆபத்துகள் ஏற்படுவதைத் தடுக்க மீனவர்கள் வாழுகின்ற பகுதியில் உஷார் காவல் பகுதிகள் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா ?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி : அத்தகைய உத்தேசம் தற்போது இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி : புயல் வரும், மழை வரும் என்ற விவரத்தை வானிலை ஆராய்ச்சி நிலையம் முதலிலேயே தெரிந்து கொள்கிறது. கடற்கரையிலே மீன்பிடிக்கச் சென்றால் ஆபத்து வரும், செல்லக்கூடாது என்று எச்சரிக்கை செய்யப்படுகிறதா ? இல்லையென்றால் இனிமேலாவது செய்வார்களா ?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி : இந்தச் சம்பவத்தில் புயல் ஏற்படவில்லை. புயல் ஏற்பட்டால் அப்படித் தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : பாதிக்கப்பட்ட மீனவர்கள் குடும்பங்களுக்கு உதவிநிதி வழங்கப்பட்டதா ? இல்லையேல் வழங்கப்படுமா ?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி : தனிக்கேள்வி வேண்டும்.

திரு. ந. வீராசாமி : மதிப்பிற்குரிய தலைவர்வர்களே, மீனவர்களுக்காக ஒதுக்கப்படுகின்ற 'போட்'கள் கேரளாவுக்குத் தனிப்பட்ட முறையிலே விற்கப்படுவதாகத் தெரிகிறது. இதைப்பற்றிய தகவல்கள் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி : அவையின்முன் உள்ள கேள்விக்கும், மதிப்பிற்குரிய உறுப்பினர் கேட்கின்ற கேள்விக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை.

திரு. எம். எஸ். மணி : மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் மீனவர்களின் பாதுகாப்பிற்காகத் தனித் திட்டம் தயாரிக்கப் போவதாகச் சொன்னார்கள். அப்படியொரு திட்டத்திலே மீனவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்கும் விஷயத்தையும் சேர்ப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி : மீனவர்கள் நலம் என்ற தலைப்பில் தெரிவிக்கப்பட்ட எல்லாவிதக் கருத்துக்களும் பரிசீலனை செய்து முடிவெடுக்கப்படும்.

திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி : மீனவர்கள் கடலுக்குச் சென்று அவர்கள் உரிய நேரத்திலே திரும்பவில்லையென்று தெரிந்தவுடன் புகார் எங்கே செய்வது, எந்த இடத்திலே புகார் செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மீனவர்களுக்கு அறிவித்து இருக்கிறார்களா ?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி : அப்படிப்பட்ட தகவல்களை அடுத்து இருக்கின்ற துறைமுகங்களின் அஸிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் ஃபிஷரீஸ் அவர்களிடம் தெரிவிக்கவேண்டும். அங்கேயிருந்து ஒன்றும் வரவில்லையென்றால் டைரக்டர் ஆப் ஃபிஷரீஸ் அவர்களிடம் தெரிவிக்கவேண்டும்.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : அப்படிப் பாதிக்கப் பட்டவர்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் திட்டம் ஏற்படுத்த உத்தேசம் உள்ளதா? இல்லையென்றால், அப்படிப்பட்ட திட்டத்தை அமல் படுத்த ஏற்பாடு செய்வார்களா?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி : நான் ஏற்கனவே அறிவித்த பிரகாரம் மீனவர்கள் நலம் கருதி அவர்கள் சொல்லு கின்ற கருத்துக்களை அரசாங்கம் பரிசீலனை செய்யும்.

திரு. எம். சுரேந்திரன் : மீன் பிடிக்கும் வேலை மிகவும் ஆபத்தான வேலையாக இருக்கிறது. ஆகவே, அவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும்பொழுது எவ்வளவு பேர்கள் போனார்கள், எவ்வளவு பேர்கள் வந்து சேர்ந்தார்கள் என்பதைப் பார்க்கக் கூடிய அளவிலே கணக்கு வைத்துக்கொள்ளப்படுகிறதா?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி : மீன்பிடிக்கச் செல்லு கின்றவர்கள் கணக்கு அறிவித்தால் அவர்கள் மீனே பிடிக்க முடியாது.

திரு. ஆர். நாகசுந்தரம் : ஐயா, மீனவர்கள் தொழில் எப்பொழுதும் ஆபத்தாக உள்ளது. அரசாங்கம் அவர்களுக் கெல்லாம் வேறு ஏதாவது தொழில் கொடுத்தால் என்ன?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி : மீனவர்களை வேறு தொழிலில் ஈடுபடுத்தவேண்டுமென்று யோசனை சொன்னார்கள். அப்படியானால் உணவுப் பிரச்னையைத் தீர்க்கமுடியாது.

திரு. கே. [illegible]. எஸ். மணி : அமைச்சர் அவர்கள் பதில்சொல்லும் பொழுது நல்ல ஒரு திட்டத்தை அரசாங்கம் வகுத்துக்கொண் டிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி வகுக்கும்பொழுது அந்நிய நாடுகளைப்போல மீனவர்களுக்கு இன்ஷ்யூரன்ஸ் திட்டம் பாதுகாப்புத் திட்டம், முன் எச்சரிக்கை திட்டம் போன்ற திட்டங் களையும் ஆலோசனை செய்வார்களா?

மதிப்பிற்குரிய திரு. ஏ. கோவிந்தசாமி : எல்லாவற்றையும் கவனத்தில் எடுத்துக்கொள்ளலாம்.

பள்ளிகளில் இந்தி பாடம்

*1 கேள்வி.—**திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய கல்வி-தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிக்கூடங்களில் ஹிந்தி கற்பது கட்டாயமாக அமுல் செய்யப்படுமா?